1706

# தில்லை

# நடராஜப்பத்து.

REGISTRAR
22 DEC 1924
MADRAS



Q23:31
N24.
183360.

...ல் பதிப்பிக்கப்பெற்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

894.8111
2799

# நடராஜப்பத்து.

183360

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ மறைநான்கின் அடிமுடியும் நீ, மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ மண்டல மிரண்டேழும் நீ, பெண்ணும் நீ ஆணும் நீ பல்லுயிர்க்குயிரும் நீ பிறவும் நீ யொருவ நீயே, பேதாதிபேதம் நீ பாதாதிகேசம் நீ பெற்றதாய் தந்தை நீயே, பொன்னும் நீ பொருளும் நீயிரு ளும் நீ ஒளியும் நீயே போதிக்கவந்தகுரு நீ, புக ழொணாகிரகங்க ளொன்பதும் நீயிந்த புவனங் கள் பெற்றவனும் நீ, எண்ணரிய ஜீவகோடி களீன்றவப்பனே என்குறைக ளார்க்குரைப் பேன், யீசனே சிவகாமி நேசனே யெனையீ ன்ற தில்லைவாழ் நடராஜனே. 1

மானாட மழுவாட மதியாட புனலாட மங் கைசிவ காமியாட, மாலாட நூலாட மறையாட

திரையாட மறைதந்தபிரமனாட, கோனாடவா
னுலகு கூட்டமெல்லாமாட குஞ்சரமுகத்த
னாட், குண்டல மிரண்டாட தண்டைபுலியு
டையாடகுழந்தைமுருகேசனாட, ஞானசம்பந்
தரொடு யிந்திரர்பதினெட்டு மினியட்ட பாலக
ருமாட, நரைதும்பை யறுகாட நந்திவா கன
மாட நாட்டியப் பெண்களாட, வினையோட
உனைபாட யெனைகாரு யிதுவேளை விருதோடி
ஆடிவருவாய், ஈசனே சிவகாமி நேசனே யெ
னையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 2

கடலென்ற புவிமீதில் அலையென்ற அரு
கொண்டு கனலென்ற வாழ்வைநம்பி, காற்றெ
ன்ற மூவாசை மாருதச்சுழலிலே கட்டுண்டு
நித்தநித்தம், உடலென்ற கும்பிக்கி உணவெ
ன்றயிரைதேடி ஓயாமலிரவுபகலும், உண்டுண்
டுறங்குவதை கண்டதேயல்லாது ஒருபயன
டைந்திலேனை, தடமென்ற மிடிகரையில் பந்
தபாசங்களெனும் தாபரம் பின்னலிட்டு, தா
யென்று சேயென்று நீயென்று நானென்று

சென்னை 600 008

தமியேனை யிவ்வண்ணமாய், இடையென்று கடைநின்று யேனென்றுகேளா திருப்பதுன் னழகாகுமோ, ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 3

பம்புசூ னியமல்ல வைப்பல்ல மாரணந்தம் பனம் வசியமல்ல, பாதாளவஞ்சனம் பாகாச புரவேச மதுவல்லசாலமல்ல, அம்புகுண்டு கள்விலக பொழியுமந் திரமல்ல ஆகாயகுளி கையல்ல, அன்போடு செய்கின்ற வாதமோடி களல்ல அறியமோகனமுமல்ல, கும்பமுனி சட்டமுனி பிரம்மரிஷி கொங்கணர் புலிப்பா ணியும், கோரக்கர் வள்ளுவர் போகமுனியிவ ரெலாங் கூறிடும் வயித்தியமல்ல, எம்மனது துன்னடிவிட்டு நீங்காது நிலைநிற்க யேது லவு புகலவருவாய், ஈசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 4

நொந்துவந் தேனென்று ஆயிரஞ்சொல் லியும் செவியென்ன மந்தமுண்டோ, நுட்ப நெறியறியாதபிள்ளையைப் பெற்றபின் நோக்

காத தந்தையுண்டோ, சந்ததமுந் தஞ்சமென் றடியைப் பிடித்தபின் தளராத நெஞ்சமுண் டோ, தந்திமுகனறுமுகன் யிருபிள்ளை யில்லை யோ தந்தைநீ மலடுதானோ, விந்தையும் ஜால மும் உன்னிடமிருக்குதே வினையொன்றும் மறிகிலேனே, வேதமும் சாஸ்திரமுமஉன்னை யே புகழுதே வேடிக்கை யிதுவல்லோ, யிந்த வுல கீரேழுமேனளித்தாய் சொல்லுயினி யுன் னை விடுவதில்லை, யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 5

வளிகண்டு உன்னடியை துதியாதபோதி லும்வாஞ்சையில்லாதபோதும், வாலாயமாய்க் கோயில் சுற்றுதபோதிலும் வஞ்சமேசெய்த போதும், மொழியேகனைமொகனையில்லாமலே படினும் மூர்க்கனே மூகடாகிலும்,பழியெனக் கல்லவோ தாய்தந்தைக்கல்லவோ பார்த்தவர் கள் சொல்வார்களோ, பாரறியமனைவிக்கிபாதி யுடலீந்துநீ பாலனைக்காக்கொணுதோ, யெழி ல்பெரிய அண்டங்களடுக்காயமைத்தநீயென்

183360

குறைகள் தீர்த்தல்பெரிதோ, யீசனே சிவகாமி
நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடரா
ஜனே. 6

Q23;4
N29

அன்னை தந்தைகளென்னை யீன்றதற் கழு
வனே அறிவிலாதற்கழுவனே, அல்லாமல்
நான்முகன் தன்னையே நோவனே ஆசை
மூன்றுக்கழுவனே, முன்பிறப் பென்னவினை
தந்து மூளுமென் றழுவனே முத்திவருமென்
றுணர்வனே, தன்னைநொந்தழுவனே உன்னை
நொந்தழுவனே தவமென்னவென் றழுவனே,
தையலர்க்கழுவனே மெய்வளர்க்கழுவனே தரி
த்திரதிசைக்கழுவனே, இன்னமென்னப் பிற
விவருமோ வென்றழுவனே, யெல்லாமுரைக்
கவருவாய் ஈசனே சிவகாமி நேசனே யெனை
யீன்ற தில்லைவாழ் நடராஜனே. 7

183360

காயாமுன்மரமீது பூபிஞ்சறுத்தனே கன்
னியர்கள் பழிகொண்டனே, கடனென்றுபொ
ருள்பறித் தேவயிறெரித்தனே கிளைவழியின்
முள்ளிட்டனே, தாயாருடன் பிறவிக்கென்ன

ஆவணக் காப்பக
சென்னை-600 008

வினை செய்தனோ தந்தபொருளிலையென்றனோ தானென்று கெர்வித்து கொலைகளவு செய்தனோ தபசிகளையேசினேனோ, வாயார பொய் சொல்லி வீண்பொருள்பறித்தனோ வாணரைப் பழித்திட்டனோ, வானரம்போர் பிறரை சேக்காதடித்தனோ வந்தபின் யென்செய்தனோ, ஈயாதலோபியென்றே பெயரெடுத்தனோ யெல்லாம் பொருத்தருளுவாய் ஈசனேசிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே.

தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்னதம்பிறவியுரவுகோடி, தன்மலை குவித்தென்ன கனபெய ரெடுத்தென்ன தாரணியையாண்டுமென்ன, சேயர்களிருந்தென்ன குருவாயிருந்தென்ன சிஷர்களிருந்துமென்ன சித்து பல கற்றென்ன நித்தமும் விரதங்கள் செய்தென்ன, ஓயாதுமூழ்கினும் என்னபலன் எமனோலை ஒன்றைக்கண்டுத்தடுக்க, உதவுமோயிதுவெலாம் சந்தைவுறவென்றுதான் உன்னிருபதம்பிடித்தேன்,யார்மீதுவுன்மன மிருந்தா

லுடன்கடைக்கண்பார்வையதுபோதுமேஈச
னே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லை
வாழ் நடராஜனே. 9

இன்னமுஞ் சொல்லவோ உன்மனங்கல்
லோ இரும்போ பெரும்பாரையோ, யிருசெவி
யுமந்தமோ கேளாது அந்தமோ யிதுவுனக்
கழகுதானோ, யென்னன்னை மோகமோ யிது
வென்னசோபமோ விதுவேவுன்செய்கை தா
னோ, உன்னைவிட்டெங்குசென்றாலும் விழல
ரவனுன் உனையடுத்துக்கெடுவனோ, ஓகோவிதி
ன்குற்றமென்குற்றமொன்றுமில்லையுற்றுபார்பெ
ற்றவையா, என்குற்றமாயினும் உன்குற்றமாயி
னும் யினியருளளிக்க நினைவாய், ஈசனேசிவ
காமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நட
ராஜனே. 10

சனிராகுகேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்
குருச் சந்திரன் சூர்யனிவரை, சற்றெனக்குள்
ளாக்கி ராசிபனிரண்டையும் சமமாய் நிறுத்தி
யுடனே, பனியொத்த நக்ஷத்திரங்களிருபத்தே

ழும் பக்குவப்படுத்திபின்னால்,பகர்கின்றகரண
ங்கள் பதினொன்றையும் வெட்டிபாரையும்வெ
ட்டியென்முன்,கனிபோலவேபேசிகெடுநினை
நினைக்கின்ற கசடர்களையுங்கசக்கி, கர்த்தனின்
தொண்டனாம் தொண்டர்க்குத்தொண்டனின்
தொண்டர்கள் தொழும்பனாக்கி, இனியவள
மருவுதிரு, கோபாலனெனையாள்வதினி யுன்
கடன்காண் ஈசனே சிவகாமி நேசனே யெ
னையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 11

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

183360

# புத்தக விளம்பரம்.

கீழ்கண்ட புஸ்தகமும் இன்னம் இதர புஸ்தகங்கள் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதினால் வி. பி. தபால் மூலமாய் அனுப்பப்படும் தபால் சார்ஜ் பிரத்யேகம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஜாதகாலங்காரம் மூலமும்-விருத்தியுரையும் ... | 2 | 0 |
| கணிதமுருகசேகரம் ... ... ... ... | 1 | 0 |
| ஹோராசாஸ்திரம் ... ... ... ... | 1 | 0 |
| கௌசிக சிந்தாமணி 1-ம் பாகம் ... ... | 0 | 14 |
| ஷை 2-ம் பாகம் ... ... ... ... | 1 | 4 |
| ஷை 3-ம் பாகம் ... ... ... ... | 1 | 0 |
| அற்புத பூலோகரம்பை கதை ... ... ... | 1 | 0 |
| சர்வ கனவின் பலன் ... ... ... ... | 0 | 4 |
| களவுகாணும் சாஸ்திரம் ... ... ... ... | 0 | 4 |
| சோதிட நூலாதாரம் ... ... ... ... | 0 | 4 |
| சிவசாமி அரிச்சந்திர நாடகம் ... ... ... | 1 | 8 |
| நீதிநெறி அரிச்சந்திர நாடகம் ... ... ... | 2 | 8 |

எமது விலாசம்:—

டி. கோபால் அண்டு கோ.

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.